


கோவையில் வ.உ.சி. மைதானத்தில் நேற்று ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு நடைபெற்றது. இதில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய செயலாளர் ராஜா, உலக தமிழர் பேரவை அமைப்பின் தலைவர் நெடுமாறன், பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### பலத்த மழையிலும் கலையாத கூட்டம்:

# கொட்டும் மழையில் நடந்த ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு

## பழ.நெடுமாறன், வைகோ, திருமாவளவன் பங்கேற்றனர்

கோவை,நவ.7-
கோவையில் நேற்று நடைபெற்ற ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டின் போது பலத்த மழை பெய்தது. இதில் பழ.நெடுமாறன், வைகோ, திருமாவளவன், ஜி.கே.மணி உள்பட பல தலைவர்கள் பங்கேற்றனர்.

### ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு

ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் 6-ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இதை தொடர்ந்து கூட்டத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றன. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பழ.நெடுமாறன், வைகோ, திருமாவளவன், ஜி.கே.மணி உள்பட பல தலைவர்கள் நேற்றுக்காலையே கோவை வந்திருந்தனர். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கோவை மாநகரம் மட்டுமல்லாமல் கோவை புறநகர், திருப்பூர், ஈரோடு உள்பட பக்கத்து மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்திருந்தனர்.

மாநாடு மாலை 5.30

டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. அதை போல இந்தியாவிலும் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும். போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள ராஜபக்சேயை உலக நாடுகளின் முன் நிறுத்தும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு ஜி.கே.மணி பேசினார்.

### மழை கொட்டத் தொடங்கியது

அவரை தொடர்ந்து தமிழர் கழக தலைவர் புதுக்கோட்டை பாவாணன் பேச தொடங்கினார். அப்போது மழை பெய்யத் தொடங்கியது. உடனே கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் சிலர் அருகில் போடப்பட்டிருந்த ஷெட்டுக்குள் சென்று நின்று கொண்டனர். அதை தொடர்ந்து ஆதி தமிழர் பேரவை தலைவர் இரா. அதியமான் பேசினார். அப்போது கடும் மழை பெய்தது. மேலும் பலத்த இடி-மின்னலுடன் காற்றும் சூழன்று அடித்தது. அப்படியிருந்தும் கூட்டத்துக்கு வந்தவர்கள் ஒதுங்க இடமில்லாமல் தாங்கள் உட்கார்ந்திருந்த பிளாஸ்டிக் நாற்காலிகளை தலை மேல் தூக்கி பிடித்தபடி மழையில் நின்றுக்

தொடங்கின.

இதனால் மழை நீர் மேடையில் உட்கார்ந்திருந்த தலைவர்கள் அனைவரின் மீதும் விழுந்து அவர்கள் நனைந்தனர். கூரை பறந்து விழுந்ததில் கூட்டத்துக்கு வந்த பிரகாஷ் (வயது 30) என்பவரின் மீது விழுந்து காலில் காயம் ஏற்பட்டது. இதைதொடர்ந்து அவரை ஒரு ஆம்புலன்சில் ஏற்றி கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### தலைவர்கள் புறப்பட்டு சென்றனர்

மேடையின் கூரை பிய்த்துக் கொண்டு பறந்ததை பார்த்துக் கொண்டிருந்த வைகோ மேடையில் உட்கார்ந்திருவர்களையும், நின்று கொண்டிருந்தவர்களையும் உடனடியாக கிழே இறங்குமாறு கூறினார். இதைதொடர்ந்து மேடையில் உட்கார்ந்திருந்த தலைவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக இறங்கி காரில் ஏறி சென்றனர். சிறிது நேரத்தில் வைகோவும் மேடையை விட்டு இறங்கி காரில் ஏறி அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

இதனால் கூட்டத்துக்கு வந்திருந்த வைகோ, ராஜா, இரு